தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(29.04.2023 முதல் 03.05.2023)

அறிக்கைஎண்: 34/2023 தேதி: 28.04.2023

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (29.04.2023 முதல் 03.05.2023).

| கடந்தவாரவானிலை (21.04.2023 முதல் 24.04.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (29.04.2023 முதல் 03.05.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 21/04 | நாள்-2 22/04 | நாள்-3 23/04 | தேதி | நாள்-1 29/04 | நாள்-2 30/04 | நாள்-3 01/05 | நாள்-4 02/05 | நாள்-5 03/05 |
| 0.1 | 2.5 | 3.7 | மழை (மி.மீ.) | 6 | 3 | 6 | 14 | 4 |
| 37 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 35 | 35 | 34 | 33 |
| 29 | 28 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 27 | 26 | 25 | 25 |
| 5 | 5 | 4 | மேகஷட்டம் (ஆக்டா) | 8 | 8 | 7 | 8 | 8 |
| 63-74 | 70-62 | 74-65 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-50 | 80-50 | 80-50 | 80-60 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 4 | 6 | 6 | 4 |
| கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் கிழக்கு |

## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். 29.04.2023 முதல் 03.05.2023 ஆகிய தினங்களில் குறைந்த மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 – 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 6 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழைக்கு முன்னால் கோடை உழவு செய்து, மழை நீரை மண்ணில் சேமிக்கவும் |
| நெல் | பசுந்தாள் உரங்கள் | எதிர்பார்க்கப்படும் லேசான மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| பயறுவகை பயிர்கள் | அறுவடை | முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் முலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

எதிர்பார்க்கப்படும் லேசான மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும்.

**இயக்குநர்**